**மஸ்கெலியா பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஸ்கெலியா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மஸ்கெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை தொடர்பில் 08 வழக்குகள் காணப்பட்ட போதும் நிதிக் கூற்றுக் களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வெளிப்படுத்தல் 2023 இன் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதாக | வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 66, 200 ஆன எஞ்சிய எழுது கருவிகளின் இருப்பு ஆண்டின் செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) ரூபா 57,200 கூட்டுத் தொகையான 67 பொருட்களின் களஞ்சிய இருப்பு மற்றும் ரூபா 350,560 ஆன சேதனப் பசளை இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2023 இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் ரூபா 1,053,852 ஆன விளம்பர பதாதை வருமானம் பட்டியலிடப்பட்டு இருந்த போதும் ஆண்டின் வருமானமாக ரூபா 109,128 தொகை கணக்கீடு செய்த காரணத்தினால் ரூபா 944,724 குறைத்து கணக்கீடு | 2023 இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | ஆண்டின் வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 79,128 ஆன விளம்பர பதாதை வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய விளம்பர பதாதை வருமானம் ரூபா 1,028,852 தொகை நடைமுறை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2016 ஈபப்ரவரி 23 ஆந் திகதிய 1955/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட திட்டங்களை பரிசோதித்தல் மற்றும் கட்டண அறவீடு தொடர்பான உப உறுப்புரையின் 12 ஆம் பிரிவு | அப் மீரியகோட்ட தோட்டத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் அபிவிருத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணிக்குரிய சமூக மற்றும் வினோத நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட வேண்டிய 1.9 ஏக்கர் அளவிலான காணி பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | குறித்த காணிப் பகுதியை சபைக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | காணிகளின் உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட் வேண்டும் |
| (ஆ) உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| I 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| i 1(III) ஆம் பந்தி | 8 கடைகளில் இருந்து ஒரே தடவையில் அறவிடப்படும் தொகை ஒரே தடவையில் செலுத்தியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது அக்கடைகளில் வியாபார நடவடிக்கைகள் செய்து வரும் தரப்பினர்களுடன் இந்த உடன்படிக்கையை செய்வதற்கு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | |
| ii | 8(I) ஆம் பந்தி | 7 கடைகள் குத்தகை யாளர் அல்லாத வேறு தரப்பினருக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது | கடைகளில் வியாபார நடவடிக்கைகளை செய்து கொண்டு செல்லும் தரப்பினருடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| II | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபை 2010 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறு வீதவரி ஆதனங்களை மதிப்பீடு செய்திருக்கிவல்லை. | விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| III | 2016 மார்ச் 17 ஆந் திகதிய மமா.உ.ஆ/ 2016/3 ஆம் இலக்க சுற்றறிக்கை | கடை வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் 2009 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்த வாடகை அடிப்படையில் 12 கடை வாடகை அறவிடப்பட்டு வந்தது. | மத்திய மாகாணத்தின் உ.ம.ஆ சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய உடன்படிக்கைகளுக்கு வருவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 505,237 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,046,051 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,129,674 | 3,431,933 | 4,302,044 | 1,358,047 | 5,073,570 | 3,091,131 | 3,508,880 | 2,228,158 |
| (ii) | வாடகை | 8,232,900 | 5,148,100 | 3,727,413 | 3,933,984 | 9,349,160 | 4,900,500 | 6,870,840 | 2,513,297 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,511,000 | 1,391,422 | 1,391,422 | - | 1,711,000 | 1,200,000 | 994,492 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 63,050,973 | 2,376,301 | 1,692,400 | 2,764,492 | 61,836,293 | 6,000,000 | 23,629,490 | 2,080,591 |
| | | 76,924,547 | 12,347,756 | 11,113,279 | 8,056,523 | 77,970,023 | 15,191,631 | 35,003,702 | 6,822,046 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 760,738 ஆன மீதியொன்ற காணப்பட்டதுடன் அதில் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 446,166 அறவிடப்பட வேண்டியிருந்தது | வீத வரி செலுத்தாதவர்களின் ஆதனங்களை தடை செய்வதற்கு உள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய 22 கடைகளிலிருந்து ரூபா 2,141,384 ஆன கடை கூலிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை | அறவிடப்பட வேண்டிய தொகைக்காக சட்ட நடவடிக்கைகளின் ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம் | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 947,772 ஆன அறிவித்தல் பதாதைக் கட்டணங்கள் அறவிடப்படாமல் இருந்ததுடன் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் அதிகார பிரதேசத்தில் 120 விளம்பர பதாகைகளிலிருந்து ரூபா 491,025 ஆன கட்டணணங்கள் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | வருமானம் அறவிட பெறவேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,255,512 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 508,880 ஆக இருந்தது. . | நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக அட்டவணைகளுடன் வேண்டுகோள் கடிதங்கள் பிரதான செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

1987 இன் 05 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அப்கொட் நகரில் பிரதான வீதியில் வியாபார நிலையங்கள் மற்றும் குகுடியிருப்புடனான கட்டிடங்கள் அனைத்தும் வீதிக்கு அருகாயில் நிர்மாணிக்கப்பட்ட இருந்த காரணத்தினால் பாதசாரிகளுக்கு பயணிப்பதற்காக பாதசாரி ஒழுங்கை ஒன்று இல்லாமல் இருந்ததுடன் வீதியின் இரண்டு வடிகாண் முறைமைக்கும் இடையுறு ஏற்படக்கூடிய வகையிலவ் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன வியாபாரங்கள் மற்றும் வீடுகளிலிருந்து கழிவு நீர் பிரதான வீதிக்கு விடுவிக்கப்பட்ட இருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் பொருத்தமான வேலைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மஸ்கெலியா இலக்கம் 2 வீதியில் அமைந்துள்ள பொது பொது மலசல கூடம் திருத்தம் செய்யப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டு இருந்ததுடன் பேருந்து நிறுத்துமிடத்திற்கு அருகிலுள்ள பொது மலசல கூடத்தில் கீழ் மாடியில் மலசலகூடங்களின் இரண்டு அறைகள் மூடப்பட்டிருந்தன | சுத்திகரித்து பயன்படுத்துவதற்கு உரிய நிலைமைக்கு கொண்டு வருவதாக | சட்ட ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | சபை அதிகாரப் பிரதேசத்தின் 5 கிலோமீட்டர் வீதிகளை மீளாய்வாண்டில் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதன் | ஆண்டினுள் செயற்படுத்தப் படும் செயலாற்றல் குறிகாட்டி சதவீதத்தை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | திட்டங்களின் பிரகாரம் செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் |

| | | |
|---|---|---|
| முன்னேற்றம் 85 வீதம் என செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்த போதும் ஆண்டினுள் 02 வீதி செயற்திட்டங்களின் கீழ் 500 மீட்டருக்கு குறைந்த அளவு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. | | வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட 13 நீர்த் தாங்கிகள் 01 தொலைக்காட்சி இயந்திரம் மற்றும் மஸ்கெலியா சிறுவர் பூங்காவிலும் ரிகாட்டன் கழிவுப்பொருள் சேகரிக்கும் நிலையத்திலும் காணப்படும் 10 உபகரணங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்கள் பொருட் பதிவேட்டிலும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட காணி மற்றும் 22 கட்டிடங்களின் பெறுமதி மதீப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் காணி மற்றும் கட்டிடங்களின் சரியான பெறுமதியுடன் இனங்கண்டு கணக்கீடு செய்வதாக. | நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபை பயன்படுத்தப்படுகின்றது ரிகார்டன் கழிவுத்தொகுதி அமைந்துள்ள காணி மற்றும் மேலும் 35 காணிகளின் உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | காணியை கையேற்பதற்காக பிரதேச செயலாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | காணிகளின் உரித்தினை கையேற்கப்பட வேண்டும் |
| (ஆ) மஸ்கெலியா சபைக்கு உரிய வீடுகளுடனான காணியின் வேலி எல்லை குறியிடப்படாதிருந்ததுடன் காணியில் அத்துமீறி வீடொன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. | உத்தியோகபூர்வ விடுதி திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடதன் அதில் காணப்படும் அத்தமீறிய நிர்மாணம் தொடர்பாக ஹட்டன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டு வருவதாக | சொத்துக்களை முறையாக பராமரித்து அத்துமீறிய நிர்மானங்கள் அகற்றப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மஸ்கெலியா பொது மயானத்தில் எல்லை வேலிகள் குறிக்கப்படாதிருந்ததுடன் சிமெந்து இடப்பட்டு நிரந்தரமாக கழிகள் கட்டப்பட்டு நினைவுத் தூபிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன். இதற்கான கட்டணங்களை அறவிடுவதற்கோ சபையின் அனுமதியோ பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையின் அனுமதி இன்றி சிரமதான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன | வேலிகளை திருத்தி அமைப்பதற்கு மதிப்பீடு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்கள் திருத்தம் செய்யப்பட்டு பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | சீதகங்குல ஓய்வு மண்டபம் மற்றும் கங்குலதன்னை ஓய்வு மண்டபத்தின் கூரை பழுதடைந்து கட்டிடம் சிதைவடைந்த நிலைமையில் காணப்பட்டதுடன் பிரதான வாகன பிரிவில் அமைந்துள்ள இக்கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க்பபட்டிருக்கவில்லை. | திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதாக | சொத்துக்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும்' |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் 16 பதவிகளில் 68 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 21 சுகாதார தொழிலாளர், 15 வெளிக்கள தொழிலாளர் பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. | மத்திய மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பதவிகள் அங்கீகரிக்கப்பட வேண்டியதால் இதுவரை வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை என்பதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் |

## 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொநற்தமான 02 வாகனங்களை திருத்தம் செய்வ தற்காக 04 ஆண்டுகளுக்கு முன்னர் தனியார் கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டு இருந்த போதும் திருத்தம் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் குறித்த கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | நிதி ஏற்பாடு இல்லாமை காரணமாக வாகனங்களை திருத்தம் செய்வதற்கு முடியாமல் | வாகனங்களை திருத்தம் செய்து கொண்டு வரப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 04 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலும் 06 செலவின விடயங்களில் 07 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | விலகல்களைக் குறைக்கும் வகையில் பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை திட்டவட்டமாக இனங் கண்டு கவனமாக பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நல்லதண்ணி புனித பூமியை அண்மித்து தனியார் காணி உரிமையாளர் ஒருவராலும் சமய நிறுவனம் ஒன்றினாலும் பாரியளவில் மண் வெட்டப்பட்டு கட்டிடங்கள் மற்றும் சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டு மண் மற்றும் கற்கள் அருகில் உள்ள நீர் மார்க்கத்துக் வெளியேற்றப்பட்டு சுற்றாடல் சேதமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே இன்னுமொரு இடத்தில் அத்துமீறிய காட்டுப் பிரதேசங்கள் சுத்திகரிக்கப்பட்டு அச்சுக்கள் மூலம் கபானா நிர்மாணிக்கப்பட்டு காணப்பட்டது | நல்லதண்ணி புனித பூமியை சுற்றி அத்துமீறிய நிர்மானம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | அத்துமீறிய நிர்மானங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் 07 நிலைபேறான நோக்கங்கள் ஊடாக 22 இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 11 இலக்குகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை | குறைபாடுகளை தவிர்த்து உரிய இலக்குகளை நிறைவேற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | தாபிக்கப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்படவேண்டும் |